மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஆ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத் தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஜனநாயகத்திற்கு விரோதமாக, தேர்தல் நடத்தப்படாமல், மீண்டும் மீண்டும் தனி அதிகாரிகள் பதவியை நீட்டிக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10—20)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கம் என்பது விவசாயிகளுடைய சகலவிதமான உற்பத்திப் பொருட்களை வாங்குவதும் விநியோகம் பண்ணக்கூடியதுமான கூட்டுறவு அமைப்பாகும். இப்படிப்பட்ட வேளாண்மைக் கூட்டுறவுத் துறை அமைப்பில் மற்ற கூட்டுறவுத் துறையில் ஏற்படும் பிரச்சினை களை அணுகுவது போல், பிரச்சினைகளை அணுகுதல் கூடாது. இப்படித் தனி அதிகாரிகளின் பதவிகளை நீட்டித்து வருவதால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே மக்கள் மேல் நம்பிக்கை வைத்துள்ள அரசு இப்படித் தனி அதிகாரிகளு டைய அதிகாரத்தை நீட்டித்துக் கொண்டே வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் செய்வதோடு, இந்த மசோதா வைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1987 மார்ச் 10]

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே ஜனதா கட்சி எதிர்க்கிறது.

**திரு. கோ. வீரய்யன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன். அதை அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வேளாண்மைப் பணிகள் பல இடங்களில், விவசாயக் கருவிகள் பழுதுபட்டு சரி செய்யப்படாமல் உள்ளதால், பாதிப்புக்குள்ளான நிலையில் இருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்துவதாக அறிவித்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமே தவிர, இந்தச் சட்ட முன்வடிவை தமிழ்நாடு அரசு நிறைவேற்றக்கூடாது என்று அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(இ) கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1987.**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் (நிலம் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

Thiru T. VENKATA REDDY : Mr. Speaker Sir, I am grateful to the Tamil Nadu Government and also to the Minister for having introduced the Bill on Kelavarapalli Reservoir Scheme (Acquisition of Land), though it is late. It is a "Varaprasadam" for our area. I request the Government to finish it within six months